[31st March 1969

(உ) இரவு நேரங்களில் ஓட்டப்படும் பேருந்துகளில் இருக்கை வசதிகளை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு இப்போது இல்லை.

(எ) ஒவ்வொரு பேருந்திற்கும் இரண்டு பணியாளர் குழுக்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் விழுப்புரத்தில் மாற்றிக் கொள்கிருர்கள். இரவு நேரங்களில் வண்டியை ஓட்டிச் செல்வதற்கு அனுபவம் முதிர்ந்த சிறந்த டிரைவர்களே நியமிக்கப்படுகின்றனர். பேருந்துகள் நல்ல நிலையில் வைத்து வரப்படுகின்றன. பழக்கப்படிச் செல்லும் பேருந்தில் கோளாறு ஏற்பட்டால், மாற்று வண்டி விட விழுப்புரத்தில் உற்றுழிப் பேருந்து ஒன்றும் உள்ளது.

திரு. டி. சந்தோஷம்: தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் ஓடுகின்ற விரைவு வண்டிகளில் நீண்ட தூரம் செல்கின்ற காரணத்தால் விமானங்களில் கொஞ்சம் சாய்வதற்கு வசதியாக ஆசனங்களை அமைத்திருப்பதைப்போல செய்வதற்கு அரசு முயற்சிக்குமா? அதற்கான நடவடிக்கையை சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இப்போது புதிதாக எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு ஒரு தனியான முறையில் மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதுவரையில் உறுப்பினர் பொறுத்திருந்து இந்தக் கேள்வியை மீண்டும் கேட்டால் நல்ல முறையில் பதில் சொல்ல முடியும் என்று கருதுகிறேன்.

Tamil Nadu State Transport Department Workers, Nagercoil.

* 356 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether the workers of Tamil Nadu State Transport Department, Nagercoil staged Satyagraha in November 1968 demanding the implementation of the agreement reached between them and the Transport Department on 20th March 1968; and

(b) if so, the details thereof?

அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள், நாகர்கோயில்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் தமிழக அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் 20—3—1968-ல் போக்குவரத்து இலாகாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கேட்டு 1968 நவம்பரில் சத்தியாகிரகம் செய்தனரா?

(இ) ஆமெனில் அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) தமிழக அரசு போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 1—11—1968-ல் சத்தியாகிரகம் செய்து நாகர்கோவிலிலும் குழித்துறையிலும் உள்ள தமிழ்நாடு போக்குவரத்துத் துறை பணிமனைகளின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

Workers unemployed due to Nationalisation of Bus Transport

* 357 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of persons absorbed in the Tamil Nadu State Transport Department, who were thrown out of employment on account of the Nationalisation of Bus Transport?

பேருந்து தடங்களை நாட்டுடைமையாக்கப்பட்டதால்
வேலையிழந்த ஊழியர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

பேருந்து தடங்களை நாட்டுடைமையாக்கப்பட்டதால் வேலையிழந்த ஊழியர்களில், எத்தனை பேருக்கு தமிழக அரசு பேருந்து துறையில் வேலை அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமையாககப்படடதால் வேலையிழநதோர் 1,350 பேர் தமிழ்நாடு போக்குவரத்துத் துறைக்கு வேலைக்காக விண்ணப்பித்துக் கொண்டனர். 1969 ஜனவரித் திங்கள் 31-ம் தேதி நிலவரப்படி அவர்களில் 905 பேர் இந்த துறையில் வேலைக்கமர்த்தப்பட்டனர்.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : So many private operators have been displaced on account of nationalisation of transport and consequently so many senior drivers and conductors have been thrown out of employment. Is there any proposal before the Government to absorb these people instead of resorting to fresh recruitment?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The employees who have been thrown out of employment on account of the nationalisation of the bus transport in certain routes have been partially absorbed in the Transport Department. The whole question depends upon certain conditions, as to their previous experience and their age and qualifications. Subject to their qualifications being suitable, they are gradually absorbed in the Transport Department.

State Housing Board Multi-storeyed Building.

* 358 *Q*.—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the number of vacant quarters in the multi-storeyed building at Nandanam, Madras constructed by the Housing Board;

(*b*) whether this was built;

(*c*) the square feet of the area; and

(*d*) the expenditure incurred for the construction of this building?

வீட்டு வசதி வாரிய பலமாடி கட்டிடம்

திரு. டி. கே. சுப்பைய்யா: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை நந்தனத்தில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள பலமாடி கட்டிடத்தில் எத்தனை குடியிருப்புகள் காலியாக உள்ளன ?

(இ) இது எப்போது கட்டப்பட்டது ?

(உ) எத்தனை சதுர அடி பரப்பளவு உள்ளது ?

(எ) இதற்குண்டான செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா- (அ) இரண்டு படுக்கை அறைகள் உள்ள அங்கணங்கள் இரண்டும், மூன்று படுக்கை அறைகள் உள்ள அங்கணங்கள் இரண்டும் இப்போது காலியாக உள்ளன.

(இ) 1966, செப்டம்பரில்.